JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**MC. 5/2022**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) the day of **07.07.2025.**

**P.W. 1 Name: Praba W/o. Murugesan**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கும் என் கணவருக்கும் நடைபெற்ற திருமணம் காதல் திருணம் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு இரண்டாவது திருமணம் செய்து கொள்ளும் வரை எனக்கும் குழந்தைக்கும் பணம் கொடுத்து வந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு இடம் வாங்குவதற்கு 3 இலட்சம் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அந்த சமயத்தில் என் பெற்றோர்கள் என்னுடன் சுமூகமான உறவு முறையில் இருந்தார்கள் என்றால் சரிதான். எதிர் மனுதாரருக்கு நான் பணம் எதும் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு பணம் கொடுத்திருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாககல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

2. எனக்கு மணிகண்டன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. 2014 ம் வருடம் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஆதார் அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது மணிகண்டன் தான் எனது கணவர் என்று விண்ணப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் 2019 ம் வருடம் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். அப்போது எனக்கும், குழந்தைக்கும் 4 இலட்சம் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. 2019 ம் வருடம் கொரானா காலகட்டம் என்பதால்எதிர்மனுதாரர் வங்கி மூலமாக தொகையை அனுப்பி அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 2014 ம் வருடம் என் கணவர் இடம் வாங்கியிருந்தார் அதற்காக எங்களிடம் பணம் பெற்றிருந்தார் அந்த பணத்தை தான் வங்கி மூலமாக திருப்பி அனுப்பினார்.

4. விவாகரத்து மனு தாக்கல் செய்வதற்கு முன்பே மணிகண்டன் என்பவருடன் வாழ்ந்து வந்தேன் என்றாலும், 2014 – 2015 ஆண்டுகளில் எதிர்மனுதாரருடன் வாழவில்லை என்றால் சரியல்ல. 2015 – 2016 ம் ஆண்டுகளில் விவரகரத்துக்கு பின்னிட்டும் இமாச்சல பிரதேசத்தில் நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தோம். 06.07.2016 ம் தேதி மணிகண்டன் தன்னுடைய மனைவியையும், குழந்தையையும் காணவில்லை என மெட்ராஸ் ரெஜிமெண்ட்ல் புகார் கொடுத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனுவில் எனக்கு மட்டும் ஜீவானம்சம் எதுவும் வேண்டாம் என்று குறிப்பிட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5. விவாகரத்து மனுவில் நான் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் வாங்கிய பணத்தை தராமல் காலம் தாழ்த்தி வந்ததால் விவாகரத்து மனுவை தாக்கல் செய்தேன். நானும் மணிகண்டனும் சேர்ந்து எதிர்மனுதாரர் மத்திய அரசாங்கத்தில் வேலையில் இருப்பதால் குழந்தையை காரணம் காட்டி பணம் கேட்டு தொல்லை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு 2019 ம் வருடம் திருமணம் நடைபெற்ற விவரம் தெரிந்த பின்னர் தான் செட்டில்மென்ட்க்கு பணம் கேட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு இரண்டாவது திருமணம் நடைபெற்று 3 குழந்தைகள் மற்றும் வயதான பெற்றோர் இருப்பதால் பெறும் சம்பளம் அவர்களுக்கே போதுமானதாக உள்ளது என்றால் சரியல்ல.

**6. 2016 ம் வருடத்திற்கு பிறது எதிர்மனுதாரரிடம் குழந்தையை நான் காட்டவில்லை என்றால் சரியல்ல. ஜீவனாம்சம் மனுவில் மாதம் ரூ.15,000 வேண்டி தாக்கல் செய்துள்ளது சரியல்ல என்றால் தவறு. 2015 ல் இருந்து தற்போது வரை மணிகண்டன் என்பவருடன் வாழ்ந்து வருவதால் நான் ஜீவனாம்சம் கேட்க தகுதி இல்லையென்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மீது போடப்பட்ட ஜீவனாம்ச வழக்கு செல்லாது என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை